# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 12.11.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல் பக்கராவின் 154 வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (2:154)**

இறை ஜமாஅத்துகள் தமது இலக்கை அடைவதற்கு நிரந்தரமான நல்லியல்புடன் இறைவன்முன் எப்போதும் குனிந்திருக்க வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

பொறுமையும் துஆவும்தான் முஃமின்களுக்கு வெற்றியைத் தருகிறது. இந்த விதியைத்தான் இஸ்லாத்திற்கு முன் வந்த நபிமார்களும் பின்பற்றினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இந்த பாடத்தைத்தான் நமக்கு கற்றுத் தந்தார்கள்; இந்த போதனையைத்தான் பரப்பினார்கள். முஸ்லிம்களாகிய நமக்கு இதுவே கட்டளையாகும். உங்களது வெற்றிகளை பொறுமை மற்றும் விவேகத்தின் மூலம் தான் பெற முடியும்.

நமது இலக்கை அடைவதற்கு இதை தவிர வேறு வழியில்லை. திருக்குர்ஆனில் பல்வேறு வசனங்களில் பொறுமை பற்றி கவனமூட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொறுமை என்பது, அல்லாஹ்வின் வழியில் என்ன கஷ்டங்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் எந்தவொரு முறையீடும் செய்வதற்காக நாவை உயர்த்தக் கூடாது. நபிமார்களின் வாழ்விலிருந்து நிரூபிக்கப்பட்டிருப்பதும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் வரலாற்றிலிருந்தும் தெரிய வருவது என்னவென்றால், அவர்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது; இன்றும் ஏற்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக இறைவனின் அன்புக்குரியவராக எவர் இருக்க முடியும்? ஆனால் அவர்களும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களும் கூட துன்பங்களை கடக்க வேண்டியது ஏற்பட்டது என்பது வெளிப்படையான ஒன்று. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுக்கு எந்த அளவுக்கு பயிற்சி அளித்திருந்தார்கள் எனில் முறையீடு செய்வது என்பது தூரமான ஒன்றாகும். அவர்களிடம் கஷ்டங்கள் வரும்போதும் அவர்கள் மீது யுத்தம் திணிக்கப்படும்போதும், அநீதியிழைக்கப்படும் போதும், பொறுமை மற்றும் துஆ என்ற ஆயுதத்தை எடுத்தனர்; பயன்படுத்தினர். ஒரு நீண்ட காலம் கஷ்டப்பட்டே வாழ்வை கழிக்க நேர்ந்தால் ஒரு மனிதனாக இருக்கின்ற காரணத்தால் தமது கஷ்ட காலத்தை நினைத்து மிகவும் வேதனைப்படுவார். இந்த கஷ்டங்கள் மற்றும் கொடுமைகளிலிருந்து நமக்கு எப்போது விடுதலை கிடைக்கும்? எப்போது நாம் வெற்றி பெறுவோம்? நமது எதிரிகள் எப்போது இறை பிடியில் வருவார்? என்று எண்ணுவார்.

அல்லாஹ் முஃமின்களுக்கு ஆறுதல் அளித்தவாறு கூறுகிறான். அல்லாஹ் பொறுமையாளர்களாகிய உங்களுடன் இருக்கின்றான். அல்லாஹ்வுடைய உதவியை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். அதுவும் அல்லாஹ்வுடைய உதவிக்கு இவ்வுலகில் மட்டுமல்ல; மரணத்திற்குப் பிறகும் கூட வாரிசாகிறார்கள். இந்த உலகிலும் மறுமையிலும் அல்லாஹ்வுடைய உதவியை, நெருக்கத்தைப் பெறுவதற்காக துன்பங்களை சகிக்கிறார். எனவே அவனுடன் தொர்பை இணைத்தவாறு அதற்காக துஆ கேட்டுக் கொண்டே செல்லுங்கள். இதுதான் நமது வேலையாகும். அல்லாஹ்வின் உதவியைக் கேளுங்கள். கேட்கும் வழிமுறை என்ன? கஷ்டங்களை சகித்துக் கொள்ளுங்கள். அதனால் சோர்வடையாதீர்கள். இவற்றை சந்தித்த காரணத்தால் எந்த குழப்பமான எண்ணங்களும் உள்ளத்தில் வரவேண்டாம். தொடர்ச்சியான நல்லியல்புடன் அவனுடன் இணைந்திருங்கள். இன்று தொழுதோம். மறுநாள் தொழுகையில் கவனம்

ஏற்படவில்லை என்று இருக்கக் கூடாது. மாறாக அல்லாஹ்வின் நினைவு எப்பொழுதும் நமது உள்ளத்தில் இருக்க வேண்டும். எனவே இவ்வாறு அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படும் போது முஃமின்கள் துஆ கேட்டு வரும்போது அல்லாஹ் தனது அருளை வழங்கிக் கொண்டே செல்வான். பொறுமைக்கு இன்னொரு பொருள், ஒருவர் தனது எல்லா ஆற்றல்களுடனும் அவனது கட்டளையைச் செயல்படுத்த முழுமையாக முயற்சி செய்வதாகும். என்னதான் சூழ்நிலை ஏற்பட்டாலும் பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். எவருக்கு தனது பசி, ஆடையின்மை, துயரங்கள், பேராசை என்ற எந்த அம்சத்தை சந்திக்க நேர்ந்தாலும் அல்லாஹ்வின் திருப்தியை விட்டு விலகி ஒரு காரியத்தை செய்வதற்கு அவரை அது நிர்பந்திக்க இயலாது எனில் அதுவே உயர்தரமான பொறுமையாகும். பிறகு எல்லா சூழ்நிலையிலும் நன்மை செய்ய முயற்சி செய்வது நன்மையின் உயர் தகுதியை நிலைநாட்டுவது அதற்காக கஷ்டங்களை சந்திக்க நேர்ந்தால் சந்திப்பது ஆகிய இவை அனைத்தும் பொறுமையின் வகையாகும்.

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எல்லா வகையான கஷ்டங்களை சகித்தும், பேராசை ஏற்பட்ட நிலையிலும் பாவத்திலிருந்து விலகியிருந்து, நன்மையில் நிலைநின்றார் எனில் அவர்தான் உண்மையான பொறுமையாளர் ஆவர். நான் ஏற்கனவே கூறியது போன்று கஷ்டங்கள் துயரங்களின் நீண்ட காலகட்டத்தை கழித்த பிறகும் அம்மக்கள் இறைவன் மீது புகார் கூறியதில்லை. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர் மீது புகார் கூறியதில்லை. இவ்வாறு நடப்பவர்கள் தான் உண்மையான பொறுமையாளர்கள் ஆவர்.

இன்று சிலர் அஹ்மதிகளை அவர்களது ஈமானிலிருந்து திருப்ப முயற்சி செய்கின்றனர். நான் முன்னரும் சுருக்கமாக இதுபற்றி கூறியுள்ளேன். காலத்தின் கலீஃபா உங்களிடம் பொறுமையாக இருங்கள்; பொறுமையாக இருங்கள். கஷ்டம் தீர்ந்து விடும் என்று மகிழ்ச்சியான வார்த்தைகளை கூறிக் கொண்டே இருக்கின்றார்கள். இவ்வாறு 100 வருடத்தை விட அதிகமாக கஷ்டத்தின் காலம் தாண்டிச் சென்று விட்டது. இன்னும் கஷ்டம் தீரவில்லை. கஷ்டம் தான் மேலும் வந்து கொண்டேயிருக்கிறது. இந்த கஷ்டம் எப்போதுதான் முடியும்? என்று சிலர் கூறுகின்றனர். இவ்வாறு பிரசுரங்கள் கூட விநியோகிக்கின்றனர். இன்னும் சில வழிமுறைகளையும் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு அஹ்மதிகளின் உணர்வுகளை தூண்டி விட முயற்சி செய்கின்றனர். அவர்களின் கருத்தின்படி அஹ்மதிகள் பலவீனமான ஈமான் கொண்டவர்கள்; இப்படியெல்லாம் சொன்னால் தமது காலடியில் வந்து விடுவார்கள் என்று நினைக்கின்றனர். பிறகு அனுதாபத்தின் ஆடையை அணிந்து வந்து கோபமூட்ட நினைக்கின்றனர். உதாரணம் கூட தருகின்றனர். எந்த நபிக்கு இவ்வளவு நீண்ட காலம் கஷ்டம் வந்தது? என்று கேட்கின்றனர். இந்த உதாரணம் ஒவ்வொரு நபியிடமும் உள்ளது. அவர்கள் திருக்குர்ஆனைப் படித்தால் அதிலிருந்து பெறுகின்ற வரலாற்று அறிவு அவர்கள் காட்டுகிற இந்த உதாரணத்தைப் போக்கிவிடும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களைப் பாருங்கள். 300 வருடத்தை விட அதிக வருடங்கள் அவர்கள் குகையில் மறைந்து வாழும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு எதிரிகள் முயற்சி செய்கின்றனர். எல்லா வகையான –ய்த்தானிய செயல்கள் மூலம் முஃமின்களை அவர்தம் ஈமானில் இருந்து விலக்க நினைக்கின்றனர். ஆங்காங்கே சிலர் நம்மை உசுப்பி விடுகின்றனர். ஆனால் முஃமின்களில் பெரும்பாலார் தமது ஈமானில் நிலைநிற்கின்றனர். எந்தவகை பேராசையும் கஷ்டமும் அவர்களின் ஈமானிலிருந்து அகற்ற முடியாது. பிறகு இது மட்டுமல்ல. அவர்கள் இந்த கஷ்டத்தினால் நபி மீதோ இறைவன் மீதோ புகார் கூறியதும் இல்லை. அவர்களே உயர்தகுதியுள்ள முஃமின்கள் ஆவர். பொறுமை, நிலைநிற்றலுக்கு உயர்ந்த முன்மாதிரிகளைக் காட்டுகின்றனர். சில நேரங்களில் கஷ்டங்கள் ஏற்படும் போது மனிதனாக இருக்கின்ற காரணத்தால் எல்லா காலத்திலும் ஒவ்வொரு நபியை ஏற்றுக் கொண்டவர்களும் அதனை வெளிப்படுத்தியும் இருக்கின்றனர். ஹிஜ்ரத்திற்கு முன்னால் மக்கா வாழ்வில் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் தமது உயிரையும் கொடுத்தனர். எல்லா வகையான சித்திரவதையையும் அனுபவித்தனர். கஷ்டங்களை சகித்து வந்தனர். சகிக்கத் தயாராக இருந்தனர். அவர்கள் ஈமானில் பலவீனமானவர்களாக இருந்ததில்லை. மிக மிக உறுதியாக இருந்தனர். தமது கஷ்டங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தனர். எவ்வளவு

காலத்திற்கு இந்த கஷ்டத்தை நாங்கள் சகிக்க வேண்டும்? என்று கேட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பட்ட துயரத்தைக் கண்டு அம்மக்கள் இவ்வாறு கூறியிருப்பார்கள் என்று கருதுவதும் தூரமான ஒன்றல்ல. இந்தக் கேள்வி கேட்கப்பட்டதும் ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் கூறுகின்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எங்கள் துன்பங்களைப் பற்றி சொன்னோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் படுத்திருந்தார்கள். நாங்கள் அன்னாரிடம், அல்லாஹ்விடம் எங்களுக்காக துஆ செய்ய மாட்டீர்களா? இந்த கடினமான நாள்களை முடித்து விடுமாறு அல்லாஹ்விடம் எங்களுக்காக துஆ செய்யமாட்டீர்களா? என்று கேட்டோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன்னால் சில மனிதர்கள் வாழ்ந்து சென்றுள்ளனர். மார்க்கப் பகைமையின் காரணத்தால் நிற்க வைத்து அடிக்கப்பட்டனர்; அறுக்கப்பட்டனர். துண்டாக்கப்பட்டனர். தலை வெட்டப்பட்டனர். ஆனால் அவர்கள் மார்க்கத்திலிருந்தும் தமது கொள்கையிலிருந்தும் திரும்பவில்லை. சில வேளைகள் பழுப்பேற்றிய இரும்பால் முஃமின்களின் மாமிசம் வெந்து போகுமாறு செய்யப்பட்டது. எலும்புகளை வெளியில் எடுத்தனர். இந்த அநீதிகள் எல்லாம் அவர்களின் மார்க்கத்திலிருந்து அவர்களை அகற்ற முடிந்ததில்லை. இந்த உதாரணத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுக்கு முன்னால் எடுத்து வைத்தனர்.

இறை இயக்கங்கள் சம்பந்தமான ஓர் அடிப்படை விஷயத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஃமின்களுக்கு புரிய வைத்தார்கள். இன்னின்ன கஷ்டங்கள் வருகின்றன. எதிரிகளின் தரப்பிலிருந்து உச்சகட்ட அநீதிகள் கூட செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த உச்சகட்ட அநீதிகள் கூட அவர்களை அவர்களின் மார்க்கத்திலிருந்து திருப்பிவிடவில்லை. மாறாக, பொறுமையுடன் இந்த எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு சென்றனர். பொறுமை மற்றும் துஆவுடன் அல்லாஹ்விடம் உதவி கேட்டு வருவீர்கள் எனில் இந்த அநீதியிலிருந்து விடுதலை பெறுவீர்கள் என்பது மட்டுமின்றி வெற்றியும் பெறுவீர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒரு மனிதர் தமது கஷ்டத்தை சொல்லி துஆவுக்காக விண்ணப்பித்தார். அவரது ஊரில் உள்ள மவ்லவி ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகவும் பணியாற்றுகிறார் என்றும் தமக்கு மிகவும் தொல்லை தருவதாகவும் குறிப்பிட்டார். அவருக்கு அங்கிருந்து இடமாறுதல் உத்தரவு கிடைப்பதற்காக துஆ செய்யுமாறு கேட்டார். அவர் சொன்னதை கேட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்னகைத்தார்கள். பிறகு கூறினார்கள்: நீங்கள் எந்த ஜமாஅத்தில் நுழைந்தீர்களோ அதன் போதனையின்படி அமல் செய்யுங்கள். கஷ்டமே உங்களுக்கு வரவில்லை எனில் பிறகு நற்கூலி எதற்கு தரப்பட வேண்டும்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் 13 ஆண்டுகள் வரை துயரங்களை சகித்து வந்தார்கள். உங்களுக்கு அக்காலத்தைப் பற்றி தெரியாதா? அல்லது உங்களுக்கு அந்த செய்தி வந்து சேரவில்லையா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களுக்கு பொறுமையையே போதித்தார்கள். இறுதியில் எல்லா எதிரிகளும் அழிந்து விட்டனர். ஒரு காலம் விரைவில் வரவிருக்கிறது. இந்த விஷமிகள் அப்போது தென்படமாட்டார்கள். அல்லாஹ் இந்த ஜமாஅத்தை உலகில் பரப்ப நாடியுள்ளான். இப்போது இம்மக்கள் உங்கள் சிறுபான்மையைக் கண்டு துன்பம் தருகின்றனர். இந்த ஜமாஅத் பெரும்பான்மை அடையும் போது இவர்கள் அனைவரும் தாமே வாயடைத்துப்போய் விடுவர். அல்லாஹ் விரும்பியிருந்தால் இந்த மக்கள் துன்பம் தந்திருக்கமாட்டார்கள். துன்பம் தருபவர்கள் பிறந்தே இருக்க மாட்டார்கள். ஆனால் அல்லாஹ் இவர்கள் மூலமாக நமக்கு பொறுமையின் போதனையை தர விரும்பினான். சிறிது கால அவகாசத்திற்குப் பிறகு எதுவுமே இல்லை என்பதை பார்ப்பீர்கள். உங்களுக்கு தொல்லை தந்தவர்கள் தவ்பா செய்து விடுவார்கள் அல்லது அழிந்து போய் விடுவார்கள். பல கடிதங்கள் இவ்வாறு வருகின்றன. துன்பங்கள் கொடுப்பதை நற்கூலி தரும் விஷயமாக கருதியிருந்தனர். ஆனால் இப்போது தவ்பா செய்கிறார்கள். பொறுமையும் ஒரு வணக்கமாகும்.

இறைவன் கூறுகின்றான்: பொறுமையாளருக்கு வழங்கப்படும் பிரதிபலனுக்கு கணக்கே இல்லை. அளவற்ற வெகுமதிகள் கிடைக்கும். இந்த கூலி பொறுமையாளர்களுக்காகவே உள்ளது. மற்ற இபாதத்துகள் குறித்து கூட இந்த வாக்குறுதி இல்லை. ஒரு மனிதர் இன்னொரு மனிதரின் ஆதரவிலேயே வாழ்வை

கழிக்கிறார். அவருக்கு கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் வருகிறது. பிறகு அவருக்கு ஆதரவு அளிப்பவருக்கு ரோஷம் வருகிறது. அம்மனிதருக்கு தொல்லை கொடுப்பவனை அழித்து விடுகிறார். இதுபோன்று நமது ஜமாஅத் இறைவனின் ஆதரவில் இருக்கிறது. கஷ்டத்தை சகிப்பதால் ஈமான் வலுவடைகிறது. பொறுமையைப் போன்று எதுவும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 1902 -ல் ஒரு நண்பருக்கு பதில் கடிதம் எழுதுகிறார்கள். நான் ஆதாரங்களை திரட்டிக் கொண்டிருந்தபோது தற்செயலாக இது கிடைத்தது. இதே 1902 ம் வருடம், நவம்பர் மாதம் தான். 108 வருடங்களுக்கு முன்பு அன்னார் இதனை கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த மேற்கோளிலிருந்து இறை உதவியின் மீது அவர்களுக்கு இருந்த உறுதி தெரிய வருகிறது. அன்னார் கூறுகின்றார்கள்: ''நான் இறைவன் புறமிருந்து வந்தவன் ஆவேன். நிச்சயமாக இறைவனிடமிருந்து எனக்கு உதவி வரும்; நிச்சயமாக வரும்''. அல்லாஹ்வுடைய எல்லா ஆறுதல்கள் முன்னறிவிப்புகளின் விளைவாகத்தான் இந்த உறுதிமிக்க சொற்களை கூறியுள்ளார்கள். இதனைக் கூட ஒரு முன்னறிவிப்பு போன்று அன்னார் கூறியுள்ளார்கள். இன்று அவ்வார்த்தைகளை ஒளிமிக்கதாக நாம் காணுகிறோம். அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இந்த தூய ஜமாஅத்தை உலகில் பரப்பினான்.

இன்று இந்த ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் உலகில் பரவியுள்ளது. அஹ்மதிகள் மீது வரம்பு மீறி நடக்கின்ற இம்மக்கள் கஷ்டம் தரவும் அநீதியிழைக்கவும் செய்கின்றனர். உதாரணமாக, பாகிஸ்தானில் நமது பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளில் பயில்கின்ற அஹ்மதி மாணவர்களையும், மாணவிகளையும் தொல்லைப்படுத்து கின்றனர். அங்கிருந்து அகற்ற முயற்சிக்கின்றனர். வியாபாரிகளுக்கு நஷ்டம் விளைவிக்க முயற்சி செய்கின்றனர். பல அஹ்மதிகளை கொலை செய்யவும் முயன்றுள்ளனர். பலர் அதனால் ஷஹீதாகி உள்ளனர். ஆனால் இந்த கஷ்டங்களுக் கெல்லாம் பிறகும் கூட ஜமாஅத் உலகில் பரவி வருகிறது. கல்வி கற்பதற்காக சில மாணவர்கள் பாகிஸ்தானை விட்டும் வெளியே சென்றனர். இதனால் எதிரிகளால் வெற்றி பெற முடியாமற் போனதோடு ஜமாஅத் வெளியில் பரவவும் அதுவே காரணமாகியது. தொழில் செய்பவர்களிடமும் வரம்பு மீறினர். உடனே அஹ்மதிகள் தமது தொழிலை உலகின் மற்ற பகுதிகளில் பரப்ப முயன்றனர். அந்நிலையில் அவர்களது தொழிலும் விரிவடைந்தது. அஹ்மதியத்தைப் பற்றிய ஓர் அறிமுகமும் ஏற்பட்டது. பிறகு ஷஹாதத்கள் நடந்தன. இதனால் சில அஹ்மதிகள் ஹிஜ்ரத் செய்தனர். குடும்பம் இடம்பெயர்ந்தது. இதனாலும் ஜமாஅத் உலகில் பரவியது. ஜமாஅத் உலகில் பரவுவது இறைநியதியாகும்.

அதனைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அஹ்மதிகள் மீது அநீதியிழைக்கப்படுவதால் ஜமாஅத் மிக விரைவாக உலகில் பரவி வருகிறது. இந்த அநீதிகள் ஜமாஅத் உலகில் பரவுவதற்கு காரணமாக அமைகின்றன. ஜமாஅத் உலகில் அறிமுகமாவதைக் கேட்டால் பெரும் வியப்பு ஏற்படும்.

பாகிஸ்தானுக்கு வெளியில் நடக்கும் பைஅத்துகள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இந்த அமல் ஆரம்பமாகிவுள்ளது. ஜமாஅத் தொடர்ந்து பரவுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பு இறைவனின் வாக்குறுதி எந்த அளவு பெருமிதத்துடன் நிறைவேறுகிறது! அதுபோன்று இந்த முன்னறிவிப்பு நிறைவேறும். ஜமாஅத் பெரும்பான்மை அடையும் போது இம்மக்கள் தன்னால் வாயடைத்துப் போய் விடுவார்கள். இதுவும் அவர்களது வார்த்தையுடன் உள்ளது. எனவே நமது முயற்சி, சிறுபான்மையை பெரும்பான்மையாக மாற்றுவது ஆக இருக்க வேண்டும்.

அல்லாஹ் நம்மை நற்பலனில் பங்குதாரராக்குவதற்காக தப்லீக் செய்யுமாறும் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்குமாறு கூறியுள்ளான். இவ்வாறு ஜமாஅத் பரவுவதற்கான காரணிகள் வெளிப்பட்டு வருகின்றன. இது எந்த மனித முயற்சியின் விளைவாகவும் அல்ல.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

நாங்கள் தவ்பா செய்கிறோம். ஜமாஅத்தில் இணைகிறோம் என்று நமக்கு கடிதம் எழுதுகின்றனர். அதுவும் விஷமம் செய்து வந்த மக்கள்தான் இவ்வாறு கடிதமும் எழுத தொடங்குகின்றனர். தவ்பா செய்து ஜமாஅத்தில் இணைகிறோம் என்கின்றனர்.

அதுபோன்று இன்று வரை இது நடந்து கொண்டுதான் இருக்கின்றது. அதுமட்டுமல்ல. எதிரி உலமாக்கள் பாதிரிகளிடமிருந்து கூட இந்த வகையான அசைவு உருவாகிறது. அஹ்மதிய்யத்தின் சத்தியம் அவர்களின் உள்ளத்தை உறுத்தியது. அவர்களுள் சிலர் பைஅத் செய்து அதனை வெளிப்படுத்தவும் செய்தனர். அவர்களுள் கிறித்தவ பாதிரிகள் உட்பட பலர் உள்ளனர். இந்த புரட்சியை அல்லாஹ்தான் மக்கள் உள்ளங்களில் ஏற்படுத்துகிறான். நாம் பொறுமை மற்றும் துஆவுடன் அல்லாஹ்விடம் உதவி கேட்டு வருவோம் எனில் அல்லாஹ்வின் முன் குனிந்திருப்போம் எனில் இந்த புரட்சியை நாம் இன்ஷா அல்லாஹ் பார்ப்போம். நமது சிறுபான்மை பெரும்பான்மை ஆகி விடும். ஆட்சேபனை செய்கிற இம்மக்கள் உயிரோடு இருந்தால் இதனை பார்ப்பார்கள். அல்லது அவர்களது சந்ததிகள் பார்ப்பர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்தக் காலம் மிக அருகில் உள்ளது. இந்த விஷமிகள் அப்போது தென்படமாட்டார்கள் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.

ஆகவே இந்த விஷமிகள் அப்போது தன்னாலேயே அழிந்து போயிருப்பர். எவரது ஈமானில் உறுதி இருக்குமோ அவர்களுக்கு அல்லாஹ் வெற்றி தருகிறான். அவர்களின் பொறுமையின் தரம் உயர்வாக இருக்க வேண்டும். அவர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதியின் மீது உறுதியான ஈமான் இருக்க வேண்டும். இந்த துக்கம், தற்காலிக கஷ்டங்கள் ஈமானில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்துகின்றன. இந்த தற்காலிக கஷ்டங்களின் போது பொறுமையுடனும் நிலைத்து நின்றவாறு கடந்து விட வேண்டும். துஆவில் முன்னரை விட அதிகமான கவனம் செலுத்துங்கள். பொறுமை, துஆவில் இருந்து பங்கு பெறுபவர்கள் யார் என்று ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

**பொறுமை, தொழுகை ஆகியவை மூலம் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக பணிவுடையவர்களைத் தவிர (மற்றவர்களுக்கு) இது கடினமான ஒன்றாகும்.(2:46)**

அதாவது இறைவனிடம் தொடர்பை ஏற்படுத்துவதில் எளிமையைக் கைக்கொள்பவர்களே முன்னேற முடியும். பொறுமை அத்தகையவர்களிடமே உருவாகிறது.

தற்பெருமை கொண்டவர் பொறுமையைக் கைக்கொள்ள முடியாது. இறைவன் முன் குனிய வேண்டிய அளவுக்கு தற்பெருமை கொண்டவர் இறைவன் முன் குனியவுமாட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் கூறினான். உனது எளிமையான நடைமுறை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. இது ஒரு பிரகடனம் ஆகும். எந்த வேலைக்காக அல்லாஹ் உன்னை தேர்ந்தெடுத்துள்ளானோ அந்த வேலையில் வெற்றி உமது பாதங்களை முத்தமிடும். அல்லாஹ் உம்மிடமிருந்து வாங்குகிற வேலையில் பெரும் பரக்கத்தை பொழியவிருக்கிறான். அதனால் எல்லா விதமான எதிர்ப்புகள் பகைமைகளுக்கு இடையிலும் கூட வெற்றி நிச்சயம் கிடைக்கும். இறுதியில் உமது பிரச்சாரம் வெற்றி அடையும். அல்லாஹ்வின் அருளால் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அஹ்மதிகளாகிய நமக்கு சிறிதுகூட அதில் சந்தேகம் இல்லை. எதிர்ப்பு அஹ்மதிய்யத்தின் வழியில் தடையை ஏற்படுத்தலாம். அதே வேளையில் அல்லாஹ்வின் உதவிகளைக் குறித்தும் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் வருகிறது. தனது அடியார்களுக்கு தான் உருவாக்கிய ஜமாஅத்திற்கு உதவி செய்வேன் என்று பல்வேறு இடங்களில் கூறுகின்றான். இந்த விஷயங்கள் அஹ்மதிய்யத்திற்கு நிச்சயம் அல்லாஹ் வெற்றியைத் தருவான் என்ற உறுதியை வழங்குகின்றன.

ஒரு முஃமின் உடைய வாழ்வு கூட இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்கின்றது. மரணத்திற்குப் பிறகு வாழ்வு கூட இதே உறுதியை வழங்குகிறது. இவ்வுலகில் அல்லாஹ்வுக்காக கஷ்டங்களை எள்ளி நகையாடல்களை சகிப்பீர்கள் எனில் அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கக்கூடிய உங்கள் இறுதிகால வாழ்விற்கு வாரிசாகி விடுவீர்கள. நிச்சயமாக இது அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்கேற்ப அல்லாஹ்வை அடைவதற்கு காரணமாக அமையும். அல்லாஹ் பணிவுடன் நடப்பவர்களைப் பார்த்து ஆறுதல் வழங்கியவாறு கூறுகிறான். **அவர்கள் தங்கள் இறைவனை சந்திக்கக் கூடியவர்கள் என்றும், தாங்கள் அவனிடமே திரும்பச் செல்லக் கூடியவர்கள் என்றும் உறுதியாக அறிவார்கள். (2:47)**

அதாவது உறுதியுடன் நின்றவாறு துஆ செய்பவர்கள், தமது பிரச்சனைகளின் போது இறைவனிடம் துஆ கேட்பவர்கள், மகிழ்ச்சி துக்கம் இரண்டிலும் ஒரே இறைவன் பக்கம் திரும்புபவர்கள் ஆகியோர்தான் எப்போதும் பணிவைக் காட்டுகின்றனர். இந்த பணிவின் விளைவாக அல்லாஹ்வின் வெகுமதிகளுக்கு வாரிசாகின்றனர். எந்த வகையான தற்பெறுமையும் அவர்களிடம் இருப்பதில்லை. இவ்வுலக வாழ்வு மற்றும் மறு உலக வாழ்வு இரண்டையும் பெறுவதற்காக முயற்சி செய்கின்றனர்.

ஒரு முஃமின் உலகியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட பிரச்சனைகளிலிருந்து தப்பிப்பதற்காக இறைவன் முன் பணிவுடன் குனிந்தவாறு அல்லாஹ்வின் உதவியை வேண்டுகின்றார். அவருடைய பொறுமை துஆ ஆகியவை அவருடைய பணிவை மேலும் அதிரிக்கிறது. அதன் மூலம் அவர் மேலும் அல்லாஹ்வுடைய அருளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வார். அவருடைய உறுதியில் எந்த தளர்வும் ஏற்படாது. அல்லாஹ்வின் கட்டளையின்படி இக்காலத்தில் மார்க்கத்திற்காக யுத்தம் செய்வதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தடை செய்துள்ளார்கள். மக்கள் தமது உயிரை தியாகம் செய்து விடுகின்றனர். உறுதியில் தளர்வு ஏற்படுவதில்லை. இறைவனுடன் தொடர்பு ஏற்படுவதில் பங்கம் ஏற்பட விடுவதில்லை. ஏனெனில் உலகம் தற்காலிகமானது; மரணத்திற்குப் பிறகு அல்லாஹ்வை சந்திக்க வேண்டும் என்று அவர்களிடம் உறுதி ஏற்படுகிறது. எனவே அவனது கட்டளையின்படி அமல் செய்வது அவசியமாகும். நாம் உயிரை கொடுக்கலாம். ஆனால் இறைவனுடைய கட்டளையிலிருந்து நம்மால் விலக முடியாது. எனவே இந்த பெயர்தாங்கி ஜிஹாத் அமைப்புகள் மற்றும் தீவிரவாத விரும்பிகள்தான் தமது பகுதியில் இஸ்லாத்தை நிறுவுவதற்கு தீவிரவாத செயல்களைச் செய்து, தற்கொலைத் தாக்குதல் செய்து உலகின் அமைதியைக் குலைக்கின்றனர். நாம் கூறுகின்றோம்: உங்களது இந்த அமல் அல்லாஹ்வின் பார்வையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன்று. அல்லாஹ்வுடன் தொடர்பு இருப்பதாக வாதிக்கின்றீர்கள் எனில் அப்பாவி உயிர்களை வாங்கிய பிறகு பெருமையுடன் எங்கள் வேலையை நாங்கள் செய்து விட்டோம் என்று அறிவிப்பு செய்யாதீர்கள். மாறாக, நாம் பணிவை மேற்கொள்ள முயற்சி செய்யுங்கள். பொறுமை மற்றும் துஆவை கையில் எடுக்க வேண்டும். உங்கள் மேன்மையை நிலைநாட்டுவதற்காக நாட்டின் சட்டத்தை கையில் எடுக்காதீர்கள். அதில் பெருமையடிக்காதீர்கள். இது தற்பெருமையாளர்களின் அடையாளமாகும். தற்பெருமை கொண்டோருக்கு அல்லாஹ் ஒருபோதும் உதவி செய்யமாட்டான். இன்று இந்த சிந்தனை இந்த கண்ணியம் அஹ்மதிகளிடம் மட்டும்தான் உள்ளது. பணிவுடன் இறை உதவியை வேண்டுகின்றனர். பணிவுடன் இறைவன் முன் அஹ்மதிகள்தான் குனிகின்றனர். பணிவின் நடைமுறையை கைக்கொண்டவாறு நன்மையில் காலெடுத்து வைக்கின்றனர். **பொறுமையாளர்களுக்கு நற்செய்தி கூறுவீராக (2:156). அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் (2:154)** என்ற கண்ணியத்தை பெறுவதற்காக எல்லா கஷ்டங்களையும் பொறுமையுடன் கடந்து செல்கின்றனர். அதுமட்டுமின்றி உயிரையும் கொடுத்து விடுவதற்கு தயங்குவதில்லை. இம்மக்களுக்கே அல்லாஹ் நற்செய்தி வழங்குகிறான். **இத்தகையோருக்கே தங்களின் இறைவனிடமிருந்து அருளும் கருணையும் இறங்குகின்றன. அவர்களே நேர்வழி பெற்றவர்கள் ஆவர் (2:158)** எனவே நீங்கள் என்ன கூற வேண்டுமோ கூறுங்கள். இவ்வளவு நீண்ட கால சோதனை உங்களை பொய்யர்களாக்குகிறது என்று கூறுங்கள். எப்போதையும் போன்று இதனையும் நாங்கள் பொருட்படுத்தப்போவதில்லை. ஏனெனில் இறைவன் நம்முடன் இருக்கிறான்.

இறைவன் நமது பொறுமையின் காரணமாக நம்மீது பரக்கத்துகளை இறக்குகிறான். இதனையும் அவர்கள் தமது கண்களால் காணுகின்றனர். நமக்கு மட்டுமே ஹிதாயத் கிடைத்திருப்பதாக அல்லாஹ் சான்று வழங்கியுள்ளான்.

எனவே நமது பணியாவது எந்த நிலை ஏற்பட்டாலும் பொறுமை, துஆவுடைய வட்டத்தை கைவிட்டு விடக்கூடாது. ஒருபோதும் விட்டுவிடக் கூடாது. அதன் மூலமே இறை அருளுக்கு நாம் வாரிசாகிக் கொண்டே செல்வோம். அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இதற்கு பிறகு நான் ஒரு ஷஹீது பற்றிய நற்குறிப்பை கூறப் போகிறேன். இவர் கடந்த சில நாட்களுக்கு முன் மர்தானில் ஷஹீதாக்கப்பட்டார். சேக் மஹ்மூது அஹ்மத் சாஹிப் ஷஹீது. இவர் நஸீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன் ஆவார். நவம்பர் 8, 2010 திங்கள்கிழமை இரவு 7.45 மணிக்கு இவரும் இவரது மகன் சேக் காரி மஹ்மூது இருவரும் தமது கடையிலிருந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தனர். வீட்டை நெருங்கி விட்டனர். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத சிலர் துப்பாக்கியால் சுட்டனர். மகன் மோட்டார் சைக்கிள் ஓட்ட இவர் பின்னால் இருந்தார். சுட்டவர்கள் பின்னால் வந்து சுட்டனர். சேக் சாஹிப் உடலில் மூன்று தோட்டாக்கள் பாய்ந்தது. ஒன்று மகன் மீது பட்டது. துப்பாக்கிச் சூட்டினால் சேக் சாஹிப் அந்த இடத்திலேயே ஷஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் (நாம் அல்லாஹ்விற்குரியவர்கள்; நாம் அவனிடமே திரும்ப உள்ளோம்). மகன் காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அல்லாஹ் அவருக்கு பூரணமான விரைவான சுகத்தை வழங்குவானாக! மகன் மிகவும் தைரியத்துடன் நடந்து கொண்டார். ரப்வாவிலிருந்து அவருடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர் கவலைப்பட வேண்டாம். எனக்கு வயது 28. இவ்வாறு குண்டுகளால் காயப்படுத்துவதால் எனது ஈமானை அசைக்க முடியாது. நான் காயமுற்றுள்ளேன். பரவாயில்லை. அப்படியே படுத்துள்ளேன். பயப்பட ஒன்றுமில்லை என்றார்.

ஷஹீது மர்ஹூமுடைய பாட்டனார் 1907 -ல் ஹஸ்ரத் மவ்வூது (அலை) அவர்கள் கையில் பைஅத் செய்தவர். இந்த வகையில் அந்த பாட்டனாருக்கு சஹாபி என்ற சிறப்பும் கிடைத்துள்ளது. இவரது தந்தை 1932 -ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கையில் பைஅத் செய்தவர். பிறகு குடும்பத்தினர் கொயட்டாவில் வாழ்ந்தனர். பிறகு மர்தான் வந்தனர். மஸ்ஜித் மர்தானில் இரண்டு மாதங்கள் முன்பு தாக்குதல் நடைபெற்ற போது இவரது சகோதரர் மகன் சேக் ஹாமித் ஷா ஷஹீதானார். இவரது தொழில் நன்றாக நடந்து வந்தது. இது எதிரிகளின் கண்ணை உறுத்தியது. சேக் சாஹிப் மற்றும் அவரது சகோதரர்களுக்கு பலமுறை சிறை செல்லும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. ஜமாஅத் சம்பந்தமான 20 வழக்குகள் இவர்கள் மீது இருந்தன. இவர்கள் மீது தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டு வந்துள்ளது. 1974 -ல் கூட இவரது சகோதரர் சேக் முஸ்தாக் சாஹிபை வேறு மாவட்டத்திற்கு பணிமாற்றம் செய்தனர். 1974 -ல் நடந்த பிரச்சனையில் மவ்லானா தோஸ்த் முஹம்மது ஷஹீது சாஹிபுக்கு ஆதாரத்திற்காக சில நூல்கள் தேவைப்பட்ட போது சேக் சாஹிப் அப்போது இஸ்லாமாபாத்தில் இருந்தார். அங்கிருந்து இருமுறை நூல்களை வாங்கித் தந்தார். அது சான்று காட்ட பயன்பட்டது. இவ்வாறு சிறு வயதிலேயே அல்லாஹ்வின் ஜமாஅத்திற்கு நல்ல தொண்டாற்றியவராவார். 2008-ல் இவர் மீது ஒருவர் வழக்கு தொடர்ந்தார். பிறகு அதற்குரிய பணத்தை கொடுத்ததில் விடுதலை கிடைத்தது. முதலில் இவர் மீது கடுமையாக நடந்து கொள்ளப்பட்டது. பிறகு இவர் துஆ செய்பவராகவும் தொழுகை மற்றும் திக்ர்களில் ஈடுபடுபவராகவும் இருக்கக் கண்டு அவர்களின் உள்ளம் மென்மையடைந்தது. கடும் வெயிலில் குளிர்ந்த நீரும், மின்விசிறியும் ஏற்பாடு செய்து கொடுத்தனர். பிறகு அவர் கேட்ட பணத்தை விட குறைவான பணத்தைப் பெற்றுக் கொண்டு வழக்கிலிருந்து விடுவித்தார். இதுவே இந்த ஷஹீதின் நிலைமையாகும். சில நாட்களுக்கு முன் இவரது கடைக்கு பக்கத்தில் ஒரு குண்டு வெடித்தது. அதில் இவர்களுக்கு சிறிது பாதிப்பு ஏற்பட்டது. இவ்வாறு நீண்ட காலம் இவரும் இவரது குடும்பத்தினரும் மர்தானிலிருந்து அநீதிகளை சகித்து வந்தனர். அல்லாஹ் இந்த ஷஹீதின் தகுதியை உயர்த்துவானாக! மற்ற குடும்ப உறுப்பினர்களையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! ஒவ்வொரு அஹ்மதியையும் அவர் மர்தானில்

வசிப்பவராயினும், பாகிஸ்தானில் ஏதாவது இன்னொரு பகுதியில் வசிப்பவராயினும் அல்லது உலகின் வேறு பகுதியில் வசிப்பவராயினும் சரி அல்லாஹ் பாதுகாப்பானாக! எதிரிகளின் விருப்பங்கள் நோக்கங்கள் மிகவும் தீயதாகிக் கொண்டே செல்கின்றன. ஷஹீது அவர்கள் தொழுகையில் மிகவும் பேணுதல் உள்ளவர்கள். குத்பாக்களை மிகவும் ஆர்வத்துடன் கேட்கின்றவர். தமது குடும்பத்தினர் அனைவரையும் பராமரித்து வந்தார்.

பல்வேறு இடங்களில் கித்மத்தே கல்க் (மக்கள் தொண்டு) -ன் பணியும் செய்து வந்தார்கள். மர்தானில் பல்வேறு இடங்களில் குளிர்ந்த நீரை வழங்குவதற்காக ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். இவருக்கு இரு மகன்கள் உள்ளனர். மூத்த மகன் இவருடன் காயமுற்றுள்ளார். அது தவிர இரு மகள்கள் உள்ளனர். அவர்களின் வயது 20லிருந்து 28க்குள் இருக்கும்.

இவரது எல்லா உறவினர்களுக்கும் அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக! தமது பாதுகாப்பில் வைப்பானாக! ஜுமுஆவுக்குப் பிறகு இவரது ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன்.

இது தவிர நமது ஜமாஅத்தின் பெரியவர், மூத்த அஹ்மதி முஹம்மத் சித்தீக் சாஹிப். இவர் கிலாஃபத் லைப்ரெரியின் இன்சார்ஜ் ஆக இருந்தார். இவரும் சில நாட்களுக்கு முன் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார். 1915 -ல் பிறந்தார். 1906 -ல் இவரது தந்தை பைஅத் செய்துள்ளார். இவரது தாயார் அதற்கு முன்பே பைஅத் செய்தவர். 1935 -ல் பஞ்சாப் யுனிவர்சிட்டியில் மவ்லவி பாஸில் தேர்ச்சி பெற்றார். அதன் பிறகு ஜாமியா அஹ்மதிய்யாவில் நுழைந்தார். 1938 -ல் அங்கிருந்து வெளியேறி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் சென்று தனது வாழ்வை அர்ப்பணிக்கப் போவதாக கூறினார். 1960 -ல் Private ஆக B.A. பயின்றார். Library Sciecne -ல் டிப்ளமோவும் பெற்றார். கிலாஃபத் Library உடைய Librarian ஆக இருந்தார். 1964 -ல் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் அரபி வகுப்புகள் ஆரம்பித்த போது அரபியில் M.A. பயின்றார். படிப்பில் நல்ல ஆர்வம் இருந்தது. அவ்வருடம் அரபியில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1934 -ல் நேஷனல் லீக் உருவானபோது அதில் இணைந்தார். 1938 -ல் குத்தாமுல் அஹ்மதிய்யா உருவாக்கப்பட்ட போது அதிலும் இணைந்தார். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொதுச் செயலராகவும், மர்கஸிய்யாவின் எடிட்டராகவும் இருந்தார். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களே சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்தார்கள்.

1947 -ல் ஹிஜ்ரத் நடந்த போது ஹஸ்ரத் அம்மா ஜான் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மற்ற பையன்களை கொண்ட குழுவை காதியானிலிருந்து அழைத்து வந்தார். 1948 -ல் ரப்வாவில் கூடாரங்கள் அமைக்கும் பணியும் அவர்களின் பொறுப்பில் இருந்தது. ரப்வா உருவாக்கப்பட்ட அந்த முதல் இரவிலேயே அங்கு தங்கும் வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் ரப்வாவில் தங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்காக போய் விட்டார். அதற்குப் பிறகு தான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அங்கு வரவேண்டியிருந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூடாரங்கள் அமைப்பதற்காக இவரை முதலில் ரப்வா அனுப்பினார்கள். கூடாரம் அமைக்கும் சாதனங்களுடன் அப்துஸ் ஸலாம் அக்தர் சாஹிப் மற்றும் இவரும் வந்தனர். வழி துண்டிக்கப்பட்டிருந்தது. நீண்ட காலம் பயணம் செய்து ரவ்பா வந்து சேர வேண்டியிருந்தது. அக்காலத்தில் தஃலீமுல் இஸ்லாம் பள்ளி தற்காலிகமாக சிலியோட்டில் இருந்தது. அதன் தலைமையாசிரியராக செய்யது மஹ்மூதுல்லாஹ் ஷா சாஹிப் இருந்தார். அவரிடம் நமது ஷஹீது சாஹிப் இரவு நாங்கள் ரப்வாவில் தங்க வேண்டும். பையன்களிடம் வெளிச்சத்துக்கு ஏதாவது அனுப்பி வையுங்கள் என்று கேட்டார். ரப்வா சென்று பார்த்ததும் முழு இருட்டாக இருந்தது. ஓர் அனுமானத்தில் கண்டறிந்து ஒரு கூடாரம் அமைத்ததால் உள்ளூர் மக்களுக்கு பெரும் வியப்பாக இருந்தது. இருவர் இந்த இருட்டில் என்ன செய்கின்றனர்? என்று வியந்து போய் விட்டனர். பிறகு சாமான்களை இறக்கி வைத்த டிராக்டரை வழி அனுப்பி விட்டனர். அமைதியாக அங்கு அமர்ந்து இருவரும் துஆ செய்து கொண்டிருந்தனர். கண்ணீர் வழிந்தது. அக்தர் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதையை உரத்த குரலில் கூறினார். அப்போது அங்கு வீடுகள் எதுவும் இல்லை. சுற்றிலும் மலைகளாக இருந்தன. மலைகளில் எதிரொலித்தவாறு இவரது குரல் இன்னும் பேரொலியாக ஒலித்தது. அப்போது தூரத்தில் ஒரு சிறு வெளிச்சம்

தெரிவதைக் கண்டனர். ஷாஹ் சாஹிபிடம் ஸ்கூல் பையன்களிடம் ஒரு விளக்கு கொடுத்து அனுப்புமாறு சொல்லி விட்டு வந்தார்கள் அல்லவா? பார்க்கும் போது 6 மைல் தூரத்தில் பையன்கள் விளக்கை எடுத்து வந்து கொண்டிருந்தனர். அதில் இரு பையன்கள் பங்களாதேஷைச் சார்ந்தவர்கள். ஒருவர் இலங்கையைச் சேர்ந்தவர். நீண்ட நேரத்திற்குப் பிறகு வந்து சேர்ந்தனர். இரவில் கூடாரமிட்டனர். உள்ளூர் மக்களிடமிருந்து உணவு வந்தது. இவ்வாறு இவர்கள் ரப்வா உருவான முதல் இரவை ரப்வாவில் கழித்தனர்.

இவ்வாறு இவரது வரலாற்றில் பல பணிகள் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் 1940 -ல் உலமாக்களுக்கு எடுத்துரைப்பதற்காக இளைஞர்களை தயார் செய்வதற்காக பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களை வைத்து ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதிலும் இவர் கலந்து கொண்டார்.

இவ்வாறு இவரது பணிகள் பல உள்ளன. லைப்ரேரியனாக இருந்து ஓய்வு பெற்றார். இவரது தகுதியை உயர்த்துவானாக. தஹ்ரீகே ஜதீதில் ஆரம்பகால உறுப்பினராக இவர் இருந்தார். பாகிஸ்தான் வந்த பிறகு உருவாக்கப்பட்ட அஞ்சுமனில் உறுப்பினராகவும் இருந்தார். ரப்வாவின் சதர் உமூமியாகவும் இருந்தார். இன்னும் பல சேவைகள் செய்துள்ளார்.

நானும் இவரை பார்த்துள்ளேன். மூத்த வயதுடையவர். எனக்கும் அவருக்கும் வயது வித்தியாசம் அதிகமாகும். அல்லாஹ்வின் அருளால் மிக பணிவுடன் எல்லாரையும் சந்திப்பவராகக் கண்டுள்ளேன். விசுவாசமுள்ள தொண்டராவார். தேவை ஏற்படும் போது கடினமான பணிகளிலும் பங்கெடுத்தவர். நிர்வாகத் திறமையுள்ளவர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது ஜனாஸா காயிப் தொழுகை தொழப்படும்.

இது தவிர மூன்றாவது ஜனாஸா காயிப் மஸ்வூது அஹ்மத் குர்ஷித் சனோரி சாஹிப். இவரது வஃபாத் நடந்து சில தினங்கள் ஆகிவிட்டன. இவரும் பல பணிகளைச் செய்தவர். குறிப்பாக கராச்சியில் பல பணிகளை ஆற்றியவர். அமெரிக்காவில் இவரது பெண் மக்கள் சேவை செய்து வருகிறார்கள். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவர்கள் அனைவருக்கும் ஜனாஸா காயிப் இப்போது நடைபெறும்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON ON 12.11.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**